(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

SUBJECT CODE 24 UTM 306

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

பி. ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

மூன்றாம் பருவம் — நேரம் : 3 மணி

**பகுதி – 3**

**தமிழ் இலக்கிய வரலாறு – 1**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. இடைச்சங்கத்தைப் புரந்தவர்களின் எண்ணிக்கை?
   அ) 89 ஆ) 59 இ) 3700 ஈ) 4440
2. குறுந்தொகையின் சிற்றெல்லை எவ்வளவு?
   அ) 2 ஆ) 4 இ) 8 ஈ) 9
3. ‘வன்தொண்டர்’ எனப்பட்டவர் யார்?
   அ) சம்பந்தர் ஆ) அப்பர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
4. தமிழின் முதல் ‘சமயக் காப்பியம்’ எது?
   அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி ஈ) வளையாபதி
5. “ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப” என்பது …………
   அ) பரணி ஆ) பிள்ளைத்தமிழ் இ) கலம்பகம் ஈ) உலா

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. தமிழ்ச் சங்கத்தை ஆதரித்த இரண்டு அறிஞர்களின் பெயர்களைத் தருக.
7. எட்டுத்தொகையில் புறநூல்களை எழுதுக.
8. கரைக்காலம்மையாரின் நூல்களைச் சுட்டுக.
9. ஏதேனும் இரண்டு சமணக் காப்பியங்களின் பெயரினை எழுதுக.
10. கோவை இலக்கியத்தின் கட்டமைப்பினைச் சுருக்கமாகத் தருக.

**பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்கள் )**

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) தொல்காப்பியத்தின் கட்டமைப்பினை விவரி.

**(அல்லது)**

ஆ) நாயக்கர் காலத்தில் தோன்றிய தமிழிலக்கியங்களைப் பட்டியலிடுக.

12. அ) நெடுநல்வாடை அகமா? புறமா? வாதிடுக.

**(அல்லது)**

ஆ) பதினெண் கீழ்க்கணக்கில் இடம்பெறும் புறநூல் குறித்து விவரி.

(த.பி.பா.)

ETHICAL PAPER

13. அ) *மாணிக்கவாசகரின் பக்தி மற்றும் இலக்கியப் பங்களிப்பை எழுதுக.*

**(அல்லது)**

ஆ) *'முதலாழ்வார்கள் மூவர்' - எனும் கூற்றினைத் தருவி.*

14. அ) *'சூளாமணி' காப்பியத்தின் உட்பொருளை எழுதுக.*

**(அல்லது)**

ஆ) *திருவிளையாடற் புராணம் குறித்து விவரி.*

15. அ) *தூது இலக்கியத்தின் பாடல் நெறியினை எழுதுக.*

**(அல்லது)**

ஆ) *ஜீ.யு போப்பின் தமிழ்ப்பணியை விவரி.*

## பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K4 / K5)**

16. அ) *தமிழ்ச் சங்கம் இருந்தது குறித்த ஏற்பையும் எதிர்ப்பையும் சான்றுடன் விவாதிக்க.*

**(அல்லது)**

ஆ) *அகத்தியர் குறித்த இருப்பையும் எதிர்ப்பையும் ஆராய்க.*

17. அ)*சங்ககாலம் தமிழர்களின் பொற்காலமா? ஆராய்க.*

**(அல்லது)**

ஆ) *'இரட்டைக் காப்பியங்கள்' எனும் ஆக்கத்தின் பொருத்தப்பாட்டினை நிறுவுக.*

18. அ) *'தேவார மூவர்' குறித்துக் கட்டுரைக்க.*

**(அல்லது)**

ஆ) *பக்தி இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பினைச் சான்றுடன் விவரி.*

19. அ) *தமிழில், சமயக் காப்பியங்களின் நோக்கும் போக்கும் குறித்துக் கட்டுரைக்க.*

**(அல்லது)**

ஆ) *தமிழ்ப் புராணங்களின் வளர்ச்சியை விவரித்துரைக்க.*

20. அ) *உரையாசிரியர்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பினைக் கட்டுரைக்க.*

**(அல்லது)**

ஆ) *சித்தர்களின் இலக்கியப் பணியினையும் அதன் தனித்துவத்தையும் விவரிக்க.*



**********************